**சுருக்கம்**

பொதுப்பணிகள் – பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை - திரு நா.ஹரிஹரன், இளநிலை உதவியாளர் - கருணை அடிப்படையில் பணி நியமனம் - பணி நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து வரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்**
**சிறுபான்மையினர் நலத் (சிநஆபி2) துறை**

அரசாணை (3ப) எண். 4

நாள் 27.07.2021
திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ, ஆடி 11

படிக்கப்பட்டது :

1. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் செயல்முறை ஆணை எண்.அ2/900/2015 , நாள் 04.01.2018.
2. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கடித எண்.அ2/ 5800/2018, நாள் 04.03.2019.

*******

**ஆணை :-**

சென்னை பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை இயக்குநரகத்தில் உதவியாளராகப் பணியாற்றி, பணிக்காலத்தின் போது 18.05.2015 அன்று மரணமடைந்த திரு கா.நாகராஜன் என்பவரின் மகன் திரு நா. ஹரிஹரன் என்பவருக்கு கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உத்வியாளராகப் பணி நியமனம் வழங்கி மேலே ஒன்றில் படிக்கப்பட்ட செயல்முறை ஆணையில் பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையரால் ஆணையிடப்பட்டது. அதன்படி, திரு நா. ஹரிஹரன் 17.01.2018 முற்பகல் முதல், சென்னை, பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரகத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வருகிறார் என்றும் அவர் பணியேற்ற நாள் முதல் அவரின் பணியினை வரன்முறை செய்யுமாறு, பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தனியர் திரு நா.ஹரிஹரன் அவர்களின் பிறந்த தேதி 26.11.1999 மற்றும் அவர் 10-ம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். எனவே தனியர், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ( பணி நிபந்தனைகள்) சட்டம், 2016-ன்படி இளநிலை உதவியாளருக்குரிய வயது மற்றும் கல்வித் தகுதிகளைப் பெற்றுள்ளதால், வயது மற்றும் கல்வித் தகுதிகளில் எவ்வித விதித்தளர்வுகளும் தேவையில்லை.

3. பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் பரிந்துரைகளை நன்கு பரிசீலித்து, திரு.நா. ஹரிஹரன், இளநிலை உதவியாளர் என்பவரின் பணியினை அவர் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட நாளான 17.01.2018 முற்பகல் முதல் வரன்முறை செய்யலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே பணிவரன்முறை செய்து ஆணையிடுகிறது.

4. மேலும், பணிவரன்முறை செய்யப்படும் நாளிலிருந்து நடைமுறையில் உள்ள விதிமுறைகளுக்குட்பட்டு, தனியர் ஊதிய உயர்வு மற்றும் நிலுவைத் தொகைகள் ஏதேனுமிருப்பின் அவற்றைப் பெறத் தகுதியுடையவராகிறார் என்றும் ஆணையிடப்படுகிறது.

5. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.1859/ட்டி1/2020, நாள் 06.02.2020, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் ஒப்புதலை அதன் அலுவல் சார்பற்ற எண்.4777/ஜி2/2020-1, நாள் 18.02.2020-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**ஆ. கார்த்திக்**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
திரு.நா. ஹரிஹரன்,
இளநிலை உதவியாளர்
பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை, சென்னை-5.
(பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர் வழியாக)
பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை -5.
மாநில கணக்காயர், சென்னை - 18 (பெயரில்)
**சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை -8.**
**<u>நகல்</u>**
**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3.**
**தொழிலாளர் (ம) வேலை வாய்ப்புத் (ட்டி 2)துறை, சென்னை -9.**
**மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.**
இருப்பு கோப்பு/உபரி நகல்.

**// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**அரசு சார்புச் செயலாளர்**